# BSNL ஊழியர் சங்கம்

## தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:35** **தேதி:-27.04.2015**

**மத்திய சங்க சுற்றறிக்கை எண்:5ன் தமிழாக்கம்**

அன்பார்ந்த தோழர்களே,

25.04.2015 தேதியிட்ட சுற்றறிக்கை எண்:5ன் தமிழாக்கத்தை கீழே கொடுத்துள்ளோம்.

**"சரித்திரம் படைத்திட்ட இரண்டு நாட்கள் வேலை நிறுத்தம்**

BSNL-ஐ புத்தாக்கம் செய்வதற்கு தேவையான உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்தி FORUM விடுத்த அறை கூவலை ஏற்று ஏப்ரல் 21 மற்றும் 22ஆம் தேதிகளில் BSNL-ல் உள்ள 2½ லட்சம் ஊழியர்களும், அதிகாரிகளும் பங்கேற்ற இரண்டு நாட்கள் வேலை நிறுத்தம் பிரமாண்டமான வெற்றியை பெற்றுள்ளது. இரண்டு நாட்களும் அனைத்து மாநிலங்களிலும் கிட்டத்தட்ட 100% வெற்றியை பெற்றுள்ளது. குமரி முதல் இமயம் வரை அனைத்து பகுதிகளிலும், அலுவலகங்கள், தொலை பேசி நிலையங்கள் மற்றும் வாடிக்கையாளர் சேவை மையங்கள் காலியாக இருந்தன. இந்த இரண்டு நாட்கள் வேலை நிறுத்தத்தில் ஊழியர்களின் பலத்த பங்கேற்பு என்பது, BSNL நிறுவனம் தொடர்பான அவர்களின் கவலையையும், அதனை பாதுகாக்க அவர்கள் கொண்டுள்ள உறுதிப்பாட்டையும் வெளிக்காட்டுவதாக உள்ளது. இந்த வேலை நிறுத்தத்தில் முழுமையாக பங்கேற்று அதனை வெற்றிபெறச்செய்த அனைத்து ஊழியர்களையும், அதிகாரிகளையும் BSNL ஊழியர் சங்கம் வாழ்த்துகிறது. இந்த வேலை நிறுத்தத்திற்காக சிறப்பாக திட்டமிட்ட FORUM மற்றும் அதன் சங்கங்களுக்கும் BSNL ஊழியர் சங்கம் வாழ்த்துக்களை உரித்தாக்கிக் கொள்கிறது. 22.04.2015 அன்று பாராளுமன்றத்தில் BSNL ஊழியர்களின் போராட்டம் தொடர்பாக கேள்விகளை எழுப்பிய CPI(M) கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சங்கர் பிரசாத் தத்தா, ஜிதேந்திர சௌத்ரி, A.சம்பத், A.கருணாகரன் மற்றும் P.K.பிஜு ஆகியோருக்கு தனது பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கிறது. அதே போல நமது போராட்டத்தை ஆதரித்த அமைப்புகளான, CITU, AISGEF, AIIEA, மத்திய அரசு ஊழியர் மகாசம்மேளனம் உள்ளிட்டவைகளுக்கும் நமது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம். நமது பலம் மற்றும் பலவீனங்களை கண்டறிந்து, அதனை போக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு மத்தியசங்கம் கேட்டுள்ள படிவத்தில் வேலை நிறுத்த விவரங்களை மாநில சங்கங்கள் 15.05.2015க்கு முன் அனுப்ப வேண்டும் என மத்திய சங்கம் கேட்டுக் கொண்டுள்ளது.

**அடுத்த கட்ட நடவடிக்கை**

BSNLஐ புத்தாக்கம் செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்தி கடந்த ஆறு மாத காலமாக BSNL ஊழியர்களும், அதிகாரிகளும் இயக்கங்களை நடத்தி வருகின்றனர். 03.02.2015 முதல் கால வரையற்ற வேலை நிறுத்தம் நடைபெறும் என 18.11.2014 அன்று முதலில் அறிவிப்பு கொடுக்கப்பட்டது. தேதிகள் பலமுறை மாற்றி அமைக்கப்பட்டு இறுதியில் 2015 ஏப்ரல் 21 மற்றும் 22 தேதிகளில் இரண்டு நாட்கள் வேலை நிறுத்தம் நடைபெற்று முடிந்துள்ளது. நாட்டின் மிகப்பெரிய பொதுத்துறை நிறுவனத்தின் 2.25 லட்சம் ஊழியர்களும், அதிகாரிகளும், போராட்டங்களில் உள்ள போது, தொலை தொடர்பு துறையின் செயலருக்கும், அமைச்சருக்கும் ஆறு மாத காலத்தில் ஒரு முறை கூட போராடும் ஊழியர் சங்கங்களின் பிரதிநிதிகளை சந்தித்து பிரச்சனைகளை விவாதிக்க நேரம் இல்லாமல் போனது ஒரு வெட்கப்பட

வேண்டிய விஷயம். உலகத்தின் மிகப்பெரிய ஜனநாயக நாடு இந்தியா என நாம் பெருமைப் படுகிறோம். ஆனால் ஒரு ஜனநாயக நாட்டில் தொழிலாளர்களுக்கு இப்படிப்பட்ட பரிதாபகரமான நிலை இருக்குமா? தொலை தொடர்பு துறையின் செயலருக்கும், அமைச்சருக்கும் தொலை தொடர்பு துறையில் உள்ள தனியார் நிறுவனங்களின் முதலாளிகளை சந்திக்க இந்த ஆறு மாத காலத்தில் தேவையான நேரம் இருந்துள்ளது. நரேந்திர மோடி அரசாங்கத்தின் இது போன்ற நடவடிக்கைகள், BSNL நிறுவனத்தை பாதுகாக்கவும், பலப்படுத்தவும் இன்னும் பல தொடர்ச்சியான போராட்டங்களுக்கு BSNL ஊழியர்கள் தயாராக இருக்க வேண்டும் என்பதையே வெளிக்காட்டுகிறது. வெகு விரைவில் FORUM சந்தித்து அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடர்பாக திட்டமிட்டு அறிவிக்கும்.

## மத்திய செயற்குழு டல்ஹௌசியில் கூடுகிறது

BSNL ஊழியர் சங்கத்தின் அடுத்த மத்திய செயற்குழு, 2015, ஜூன் 16 முதல் 18 வரை இமாச்சல பிரதேசத்தில் உள்ள டல்ஹௌசியில் நடைபெற உள்ளது. கொல்கொத்தா அகில இந்திய மாநாட்டிற்கு பின் நடைபெற உள்ள இந்த முக்கியமான கூட்டத்திற்கான அறிவிப்பு ஏற்கனவே கொடுக்கப்பட்டுள்ளது. அனைத்து மத்திய செயற்குழு உறுப்பினர்களும் தவறாமல் கலந்துக் கொள்ள வேண்டும். ஒரு சிறிய மாநிலமாக இருந்தாலும், மத்திய செயற்குழுவினை ஏற்று நடத்தும் பொறுப்பினை இமாச்சல பிரதேச மாநிலம் ஏற்றுக் கொண்டுள்ளது. மத்திய செயற்குழு உறுப்பினர்களை தவிர மற்றவர்களுக்கு தங்கும் இடம் மற்றும் உணவு போன்ற வசதிகள் செய்து கொடுக்க இயலாது என்பதால், மத்திய செயற்குழு உறுப்பினர்களை தவிர மற்றவர்கள் யாரும் வர வேண்டாம் என மத்திய சங்கம் கேட்டுக் கொண்டு உள்ளது.

## மே தினம்

இந்த ஆண்டு மே தினத்தை மிகச்சிறப்பாக கொண்டாட வேண்டும் என மாவட்ட மாநில சங்கங்களை மத்திய சங்கம் கேட்டுக் கொள்கிறது. நம் நாட்டில் உள்ள தொழிலாளர்கள், கடுமையான தாக்குதல்களுக்கு உள்ளாகி வருகின்றனர். தொழிலாளர் நலச்சட்டங்களில் மாற்றங்களை கொண்டு வருவதன் மூலம் தொழிலாளி வர்க்கம் போராடி பெற்ற பல உரிமைகளை நரேந்திர மோடி அரசாங்கம் தடை செய்ய வேக வேகமான நடவடிக்கைகள மேற்கொண்டு வருகிறது. கடுமையான பங்கு விற்பனை திட்டங்களின் மூலம் பொதுத்துறை நிறுவனங்களின் மீதும் கடுமையான் தாக்குதலை தொடுத்து வருகின்றது. பெருமுதலாளிகளுக்கான சலுகைகளை வாரி வாரி வழங்கும் மத்திய அரசு, ஏழை எளிய மக்களுக்கு வழங்கி வரும் மானியங்களின் மீது கடுமையான தாக்குதல்களை தொடுக்கின்றது. மதவாத அடிப்படையில் தொழிலாளர்களை பிரிப்பதற்கான முயற்சிகளில் RSS ஈடுபட்டு வருகிறது. எனவே நரேந்திர மோடி அரசாங்கத்தின் மக்கள் விரோத, தொழிலாளர் விரோத கொள்கைகளை அம்பலப்படுத்தவும், அனைத்து பகுதி தொழிலாளர்களின் ஒற்றுமையை பலப்படுத்த வேண்டியதின் அவசியம் தொடர்பாகவும் விரிவாக எடுத்துரைக்கவும் இந்த மேதினத்தை பயன்படுத்த வேண்டும்.” என நமது பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு தனது சுற்றறிக்கை எண்:5ல் தெரிவித்து உள்ளார்.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுள்ள,

(A.பாபு ராதாகிருஷ்ணன்)
**மாநில செயலாளர்**